செ.வெ.எண்: 708

நாள்: 23/08/2010

பத்திரிகை செய்தி

தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மற்றும் மருத்துவ மனைகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்படும் மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் நேர்காணல் மற்றும் கலந்தாலோசனை செய்து உடனுக்குடன் நிரப்பபட்டு வருகிறது. ஏற்கனவே இருபத்தி ஆறு முறை கலந்தாய்வு மற்றும் ஆலோசனை கூட்டங்கள் மூலம் 6503 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் நிரப்பபப்பட்டுள்ளன. தற்போது அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கக்கூடிய மருத்துவ மனைகளில் (HSP / Cemonc /NICU) காலியாக உள்ள 783 மருத்துவ அலுவலர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது . மேற்படி பணியிடங்களை நிரப்ப வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு 27வது கலந்தாய்வு கூட்டம் 23.08.2010 முதல் 25.08.2010 முடிய நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை பயிற்சி நிலையம் , பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008 என்ற இடத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெற்று வருகிறது. தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு அன்று மாலையே பணி நியமன ஆணைகள் வழங்கப்படும். நியமன ஆணைகள் பெற்றவர்கள் 15 தினங்களில் பணியில் சேர வேண்டும்,

23.08.2010 முதல் 25.08.2010 வரை மூன்று நாட்களில் 1795 மருத்துவர்களை வேலை வாய்ப்பு அலுவலக மூலமாக கலந்தாய்வுக்கு வரவழைக்கப்பட்டு அவர்களில் 783 மருத்துவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமணைகளில் நியமிக்கப்படுவார்கள்.

1/38

23/8/10

இயக்குநர்
பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு
மருந்து துறை, சென்னை–6

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9